## DEPOSITION OF WITNESS

(Chapter XXV Code of BNSS 2023)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,
ELUMATHUR VILLAGE IN MODAKURICHI TALUK

**CC.No. 115/2024**

Deposition of Witness of PW5

| | | | |
|---|---|---|---|
| Name | : தனசேகரன் | Calling | : |
| Father/Husband's Name | : முத்துசாமி | Age | : |
| Village | : | | : |
| Taluk | : | | : |

Solemnly affirmed in acordance with the provisions of Act X of 1873 of the day of 20th January 2026.

எதிரி ஆஜரில் உள்ளார்.
சாட்சி சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறார்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது நஞ்சைஊத்துக்குளியில் வசித்து கொண்டு கம்ப்யூட்டர் சென்டர் வைத்துள்ளேன். கடந்த 13.10.2021 ம் தேதி வல்லால் ஈஸ்வர் கோவில் அர்ச்சகரின் நகையை பறித்தது சம்பந்தமாக மறுநாள் காலை 6.00 மணிக்கு மொடக்குறிச்சி போலீஸார் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர், மாதிரி வரைபடம் வரைந்தார்கள். அதில் நானும், ஜெகன்முத்து ராஜ் என்பவரும் கையெழுத்து செய்தோம். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையது தான். **பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீஸார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிதரப்பு குறுக்கு விசாரணை**

போலீஸார் என்னை எப்போது விசாரித்தார்கள் என்றால் கோவிலில் வைத்து விசாரித்தார்கள். பின்னிட்டு விசாரணைக்காக போலீஸார் என்னை காவல்நிலையம் அழைத்தார்களா என்றால் இல்லை. நான் அந்த கோவிலுக்கு சாமி கும்பிடுவதற்காக சென்றேனா என்றால் ஆமாம். சம்பவ நடந்ததாக சொல்லும் கோவிலில் தெற்கு திசையில் என்ன சாமி உள்ளது என்றால் விநாயகர் கோவில் உள்ளது. கோவிலுக்கு வெளியில் வீடுகள் உள்ளதா என்றால்

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2026.01.20 18:42:30 +0530

இல்லை, ஆறு தான் உள்ளது. பார்வை மகஜர் மற்றும் மாதிரிவரைபடத்தை வழக்கிற்காக தயார் செய்து கொண்டார்கள் என்றால் சரியல்ல. காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து செய்து விட்டு தற்போது சம்பவ இடத்தில் வைத்து கையெழுத்து போட்டதாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2026.01.20 18:42:35 +0530